வட.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல.04/2019

எனது இல.**NP/07/10/01/123**
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்.
**18.03.2019**

செயலாளர், நிதி, திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சிஅமைச்சு,
ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம்,
பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர், பி.உ.உ.ஆ.அலுவலகங்கள்,
ஆணையாளர்-மாநகர சபை, செயலாளர்கள் - நகரசபைகள், பிரதேசசபைகள்
வடக்கு மாகாணம்.

## வடக்கு மாகாண பொதுச் சேவையின் வருமானப் பரிசோதகர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை -2019

வடக்கு மாகாண பொதுச் சேவையின் வருமானப் பரிசோதகர் தரம்III இன் பதவி வெற்றிடங்கள் *08*ற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையானது வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் ***2019* மே மாதம்** யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும் என அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி *18.04.2019* ஆகும்.

### *02.* ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள்

*02.1* *2013.01.01* ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட வருமானப் பரிசோதகர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கும் மற்றும் அச்சேவைப் பிரமாணக்குறிப்பில் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் திருத்தத்திற்கும், வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் **G/NPC/A4/LG/Approval/17/2018ம்** இலக்க 2018.11.30ம் திகதிய கடிதம் மூலமான அனுமதிக்கு அமையவும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயகசோசலிசக் குடியரசின் **1817/30** ஆம் இலக்க **2013.07.03**ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரசசேவைக்கான தாபனநடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கு உட்பட்டு தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் வருமானப்பரிசோதகர் தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவர்.

*02.2* இப் பரீட்சையில் சித்தி பெற்ற பரீட்சார்த்திகள் வருமானப் பரிசோதகர் தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவர். இப்பதவி ஒரு வருடகால தகுதிகாண் காலத்தைக் கொண்டதும், நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு வடக்கு மாகாண வருமானப் பரிசோதகர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து *03*வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

*02.3* இச்சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்படிதல் வேண்டும்.

*02.4* ஒரு சேவை நிலையத்தில் நியமனம் பெறுபவர், அதே சேவை நிலையத்தில் குறைந்தது *05* வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றுதல் வேண்டும் என்பது கட்டாய நிபந்தனையாகும்.

*02.5* பொது நிர்வாகசுற்றறிக்கை *01/2014* மற்றும் இது தொடர்பாக தொடர்ந்துவரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமைய நியமனத் திகதியிலிருந்து *05* வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரசகருமமொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

*02.6* நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான உரிமையினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

### *03.* தகைமைகள் *:-*

*03.1* ***03/2016*** இலக்கபொது நிர்வாகசுற்றறிக்கைக்கு அமைவாக பின்வரும் சம்பளக் குறியீட்டில் சம்பளத்தை பெறுபவராக இருத்தல் வேண்டும். PL-I- 2016, PL-2-2016, PL-3-2016, MN-1-2016.

*03.2* உள்ளூராட்சித் திணைக்களங்களுக்குட்பட்ட அலுவலகங்களில் (Officers under the Local Government Department) இப்பதவிக்கான சேவைப் பிரமாணக் குறிப்பின் **இணைப்பு – V** (Annexure – V) இல்

குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு நிரந்தர பதவியில் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன் **உடன் முந்திய தொடர்ச்சியான திருப்திகரமான 05 வருடகாலச் சேவையை** பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

03.3 2013.01.01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் அனுமதிக்கப்பட்ட வருமானப் பரிசோதகர் பதவிக்கான சேவைப்பிரமாணக் குறிப்பின் **இணைப்பு - V இல் (Annexure – V) குறிப்பிடப்பட்டுள்ள வகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே** இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமையுடையவர்களாவர். இது குறித்து அத்திணைக்களத்தின் தலைவர் திருப்திகொள்ளல் வேண்டும்.

03.4 கல்விப் பொதுத் தராதர (சா.த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தலுடன் **மொழி** (தமிழ் /சிங்களம் /ஆங்கிலம்), **கணிதம்** ஆகிய இரு பாடங்களில் திறமைச் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

03.5 **2019.04.18**ஆம் திகதிக்கு உடன் முன்வரும் ஐந்து (05) வருடகாலப் பகுதியில் **தொடர்ச்சியாகவும், திருப்திகரமாகவும் சேவையாற்றியுள்ளவராக** இருக்கவேண்டுமென்பதுடன் அதுபற்றி திணைக்கத் தலைவர் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

03.6 பரீட்சார்த்தியானவர் சிறந்த ஒழுக்க நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

03.7 ஒவ்வொரு பரீட்சார்த்தியும் வடமாகாணத்தின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய உடல்,உள ஆரோக்கியத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.

<u>குறிப்பு</u> :-

(அ) ஏதேனும் பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு முன் சேவையாற்றியுள்ள அல்லது ஏதேனும் பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமனம் செய்வதற்குரிய நிபந்தனையான பயிற்சி காலஎல்லை மேற்படி **பந்தி 03.5** இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பெறுவதற்கான ஐந்தாண்டுக் காலவெல்லையாக கணக்கிலெடுக்கப்படமாட்டாது.

(ஆ) ஏதேனும் பதவியொன்றில் நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு முன்னர் தற்காலிக/அமைய அடிப்படையில் சேவையாற்றியுள்ள காலப்பகுதிகளையும் மேற்படி **பந்தி 03.5** இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெறுவதற்கான ஐந்து (05) ஆண்டுகாலவெல்லையாக கணக்கிலெடுக்கப்படமாட்டாது.

## 04 ஆட்சேர்ப்புமுறை :-

04.1 எழுத்துப் பரீட்சை மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொதுநிர்வாகசுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாகவும் ஆட்சேர்ப்பு செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப் பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். கல்வித் தகைமைகள் பரிசீலிக்கப்படாமல் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை எழுதுவதற்கான அனுமதி வழங்கப்படும். நேர்முகப்பரீட்சையின் போது சகல தகைமைகளும் பரிசீலிக்கப்படும். இதன் போது மேலதிக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

04.2 எழுத்துப்பரீட்சையில் தகைமை பெறும் விண்ணப்பதாரிகளிலிருந்து, அவர்கள் பெற்ற மொத்தப்புள்ளிகளின் வரிசை ஒழுங்கில் நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படுவர்.

## 05. பரீட்சைக் கட்டணம் :-

விண்ணப்பதாரி வதியும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள அஞ்சல் அலுவலகமொன்றில் **500.00**ரூபாவை ''**செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்**'' என்ற பெயருக்குச் செலுத்தியதற்கான **யாழ்ப்பாணம் பிரதான தபால் அலுவலகத்தில்** மாற்றக்கூடியவாறான காசுக்கட்டளையினை பெற்று விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 06. விண்ணப்பிக்கும் முறை :-

6.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக A4 அளவிலான (21செ.மீx29செ.மீ) தாளின் 1 முதல் 4.5 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும் 4.6 முதல் 6 வரையான பந்திகள் இரண்டாம் பக்கதிதிலும் ஏனையவை மறுபக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை **18.04.2019**ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு,

"**செயலாளர், மாகாணபொதுச்சேவைஆணைக்குழு, வடக்குமாகாணம், இல:393/48, கோவில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்."** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

6.2 அனுப்பி வைக்கப்படும் கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் "**வருமானப் பரிசோதகர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை - *2019*"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்

6.3 விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது .பரீட்சைக்கான அனுமதிஅட்டை மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதிஅட்டை அனுப்பி வைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக்கருதப்படலாகாது.

6.4 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் *03* நாட்களுக்கு முன்னராவது அனுமதிஅட்டை கிடைக்காவிடின், அனுமதிஅட்டை கிடைக்காமைபற்றி பின்வரும் விபரங்களுடன் **"செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்குமாகாணம், இல:393/48, கோவில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்கவேண்டும் *(தொலைபேசி இல – 021 221 9939 தொலைநகல் இல - 021 221 9940).*

குறிப்பு :-
கோரிக்கைக் கடிதம், பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசியஅடையாளஅட்டை இலக்கம், விண்ணப்பதாரியின் அஞ்சல் முகவரி, விண்ணப்பப் படிவத்தின் பிரதி, விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், மற்றும் திகதி, பரீட்சைக்கட்டணம் செலுத்தியதற்கான சான்றுப்படுத்திய நிழற்படப்பிரதி, அனுமதிஅட்டை அனுப்பிவைப்பதற்கான தொலைநகல் இலக்கம்.

### 07.ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :-

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசியஆள்அடையாளஅட்டை
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை செயலாளர் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு அவர்களின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களைமீறினால் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

### 08.பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சைவிதிகளின்படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரசசேவையிலிருந்து நீக்கப்படுவர்.

### 09. சம்பளஅளவுத்திட்டம் :-

பொதுநிர்வாகச் சுற்றறிக்கை *03/2016*க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 1 - 2016**க்கு ஏற்பவருமானப் பரிசோதகர் சேவையின் தரம் - III ற்கான திரட்டிய சம்பளவிகிதமானது ரூபா**27,140 – 10 x 300 - 11 x 350 - 10 x 495 – 10 x 660 – 45,540/-** ஆகும். *(ரூபா27,740 சம்பளபடிநிலைக்கு முன்* வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை–II இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

**10.பரீட்சைத் திட்டம் :-**

இப் பரீட்சை கீழ்வருமாறு இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இது தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| இல | வினாப் பத்திரம் | பாடவிதானம் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| *01* | உளச்சார்பு | இவ்வினாத்தாள் விண்ணப்பதாரரின் எண்கணிதத்திறன், தர்க்கிக்கும் திறன் மற்றும் பொதுவிவேகம் ஆகியவற்றைப் பரீட்சிக்கும் வகையிலான வினாக்களைக் கொண்டிருக்கும | *01* மணித்தியாலம் | *100* |
| *02* | பொதுஅறிவு | பொதுஅறிவு மற்றும் விண்ணப்பதாரரின் பதவி தொடர்பிலான திறனை பரீட்சிக்கும் வகையிலான வினாக்களைக் கொண்டிருக்கும். | *01* மணித்தியாலம் | *100* |

குறிப்பு :-

(I) கடமைகளை வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்காகப் பரீட்சார்த்திக்குள்ள தகைமைகளையும் ஆற்றல்களையும் சோதிக்கும் வகையில் இவ்வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்படுகின்றன.

(II) இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதால் நியமனத்திற்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நாற்பதுவீதம் (40%) ஆவது பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் ஐம்பதுவீதம் (50%) ஆவது பெற்றுக்கொள்ளல் வேண்டும். எனினும் விண்ணப்பதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் வரிசை ஒழுங்கிலேயே ( Rank Order) நியமனம் வழங்கப்படும்.

**11. பரீட்சைப் பெறுபேறுகள் :-**

பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளம் மூலம் வெளியிடப்படும். அத்துடன் பரீட்சைக்குத் தோற்றிய ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் தபால் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.

**12.** இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்து செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு. இச் சுற்றுநிருபத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகியமொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

**அ.சிவபாலசுந்தரன்,**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
*18.03.2019*

பிரதிகள் :-

1. பிரதம செயலாளர், பிரதம செயலாளர் செயலகம். - வடமாகாணம் - தகவலுக்காக
2. ஆளுநரின் செயலாளர், ஆளுநர் செயலகம். - வடமாகாணம் - தகவலுக்காக